தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் போடி மேற்கு ஒன்றிய சார்பாக ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் போடி லட்சுமணன், அஜீப்கான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது சரவணக்குமார் எம்.எல்.ஏ. அய்யப்பன், புருஷோத்தமன், கண்ணியம்பட்டி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம். பி. பேராசிரியர் கான்ஸ்டன் டைன்ரவீந்திரன். கழக இளம் பேச்சாளர் சுருதி.போடி நேரு பாண்டியன் ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள். சங்கர். முருகேசன், தெய்வேந்திரன். ராஜாரமேஷ். செந்தில் முருகன். கண்ணன். சுரேஷ்.வி.டி. ராஜேந்திரன் கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் இன்று நடைபெறுகிறது – சிவகங்கை மாவட்ட தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்

பள்ளத்தூர் கே.எஸ்.ரவி இல்லத் திருமண விழா வரவேற்பு!

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் – தொழிலதிபர் பழ.படிக்காசு வாழ்த்துகின்றனர்!

சிவகங்கை, மார்ச் 10 -

சிவகங்கை மாவட்டம், தி.மு.க. தலைமை பொதுக் குழு உறுப்பினர் பள்ளத் தூர் கே.எஸ்.ரவி சகோதரர் - நினைவில் வாழும் கே. எஸ்.கணேசன் - தமிழரசி ஆகியோரது புதல்வர் க. சந்தோஷ்க்கும் இராமநாத புரம் சாத்தான்குளம் கி. செல்வராஜ் - நித்யா ஆகி யோரது புதல்வி செ.சோபி யாவுக்கும் மணவிழா நேற்று (9.3.2025 - ஞாயிறு) காலை 10.30 மணியளவில் இராமநாதபுரம், அமிர்தா நகர் ஜங்ஷன், ராமேஸ்வ ரம் ரோட்டில் உள்ள ஜெ.பி.ஆர்.மஹாலில் நடைபெற்றது.

இம்மணவிழா வர வேற்பு இன்று (10.3.2025 திங்கட்கிழமை) பகல் 11 மணியளவில் பள்ளத்தூரில் உள்ள மணமகன் இல்லத் தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகி றார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் தொழிலதிபர்கள் பள்ளத் தூர் பி.எல்.படிக்காசு அம்ப லம், உசிலம்பட்டி சு.சுப. செல்லப்பன் அம்பலம், கோட்டையூர் பொன். பாஸ்கரன் அம்பலம், இங் கிலாந்து முத்துராமலிங்கம் பிரபா மற்றும் கழக நிர்வா கிகள் பங்கேற்று மணமக் களை வாழ்த்துகின்றனர்.

பள்ளத்தூர் கே.எஸ்.ரவி - ருக்மணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பின்படி

தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டங்கள்!

தூத்துக்குடி – விளாத்திகுளம் – கோவில்பட்டியில் நடைபெறுகின்றன!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 10 -

தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந் தித் திணிப்பு - நிதிப்பகிர்வில் பாரபட்சம் - தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண் டித்து தமிழ்நாடு முழுவ தும் சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. இளைஞ ரணி சார்பில் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத் தப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தார்.

அவரது அறிவிப்பின்படி தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட் பட்ட மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் கண்ட னப் பொதுக்கூட்டங்கள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன் தலைமையில் நடைபெற உள்ளதாக தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கீதா ஜீவன் அறிக்கை வெளியிட் டுள்ளார்.

இது குறித்து அவர் தெரி வித்திருப்பதாவது:-

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி, இந்தித் திணிப்பு - நிதிப்பகிர்வில் பாரபட்சம் - தொகுதி மறு சீரமைப்பு என அனைத்து விதங்களிலும் தமிழ்நாட் டிற்கு அநீதி இழைத்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி சட் டமன்ற தொகுதியில்

மார்ச் 10-ஆம் தேதி திங் கட்கிழமை மாலை 6 மணிக்கு விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் எட்டையாபுரம் - நடுவிற் பட்டி பகுதியில் இளைஞ ரணி சார்பில் நடைபெறும் கண்டனப் பொதுக்கூட் டத்தில் சிறப்புப் பேச்சாள ராக ஊடகவியலாளர் மில் டன், இளம் பேச்சாளர் சக்திவேல் முருகன் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க் கண்டேயன் உரையாற்றுகி றார்கள்.

அதற்கு மறுநாள் மார்ச் 11-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு கோவில்பட்டி சட்டமன் றத் தொகுதியில் இலுப்பை யூரணி ஊராட்சியில் உள்ள லாயல் மில் காலனி பகுதியில் நடைபெறும் கண்டனப் பொதுக்கூட் டத்தில் சிறப்புச் பேச்சாள ராக தி.மு.க. மாநில மாண வரணித் தலைவர் இரா. ராஜிவ் காந்தி, இளம்பேச் சாளர் செல்வி.உமாராணி மற்றும் கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா.கருணா நிதி உரையாற்ற உள் ளார்கள்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளை ஞரணி சார்பில் நடைபெற உள்ள இந்த மூன்று கண்ட னப் பொதுக்கூட்டங்களி லும் நான் கலந்து கொள்கி றேன். மேலும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட, மாந கர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகி களும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்க ளும், சார்பு அணி நிர்வாகிகளும் மற்றும் இளைஞரணியைச் சேர்ந்த நிர்வாகி களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கள்ளக்குறிச்சி நீலமங்கலம் தனியார் பள்ளி கலையரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், வடக்கு நெமிலி ஊராட்சியில் இலவச நீர் மோர் பந்தலை அமைச்சர் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், பழ வகைகளை வழங்கினார். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, ம.ஜெயச்சந்திரன், மு. தங்கம், முருகன், செல்வராஜ், கோபிகிருஷ்ணன், பாலமுருகன், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

250 மகளிருக்கு பிங்க் நிற ஆட்டோக்களை முதல்வர் வழங்கினார்!

பிங்க் ஆட்டோ திட்டம் - புதிய நம்பிக்கை பயணம்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்

சென்னை, மார்ச் 10-

தினகரன் நாளிதழில் நேற்றைய தலையங்கத்தில் 250 மகளிருக்கு பிங்க் நிற ஆட்டோக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி னார். இது புதிய நம்பிக்கை பயணம் என்று 'தினகரன்' நாளிதழ் தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

முழுவதும் நேற்று சர்வ தேச மகளிர் தினம் கோலா கலமாக கொண்டா டப்பட் டது. இதில் தமிழ்நிலத்தின் தலைநகரான சென்னையில் நடந்த விழாவில் 250 மகளி ருக்கு பிங்க் நிற ஆட்டோக் களை வழங்கினார் முதல் வர். இது மாநிலம் கடந்தும் மகளிர் மேம்பாட்டு அமைப் புகளின் கவனத்தை ஈர்த்துள் ளது. சென்னை மாநகரத்தில் பெண்களின் பாதுகாப் பினை உறுதி செய்திடும் வித மாகவும், சுயதொழில் வேலைவாய்ப்பினை உரு வாக்கும் விதமாகவும் 'பிங்க் ஆட்டோ' திட்டம் செயல்ப டுத்தப்படும்.

அரசு மானியமாக தலா ரூ.1 லட்சம் வீதம் வழங்கி பிங்க் ஆட்டோ திட்டம் செயல்படுத்தப்படும். கைம் பெண்கள், கைவிடப்பட்ட பெண்களுக்கு இதில் முன்னு ரிமை அளிக்கப்படும் என்று கடந்த ஜூன் மாதம் நடந்த சட்டப்பேரவை கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்கு உயிர்கொடுத்து 250 மகளிர்

தினகரன்

மார்ச் 9, 2025 ஞாயிற்றுக்கிழமை

புதிய நம்பிக்கை பயணம்

உலகம் முழுவதும் நேற்று சர்வதேச மகளிர் தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் தமிழ்நிலத்தின் தலைநகரான சென்னையில் நடந்த விழாவில் 250 மகளிருக்கு பிங்க் நிற ஆட்டோக்களை வழங்கினார் முதல்வர். இது மாநிலம் கடந்து மகளிர் மேம்பாட்டு அமைப்புகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சென்னை மாநகரத்தில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் விதமாகவும், சுயதொழில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் விதமாகவும் 'பிங்க் ஆட்டோ' திட்டம் செயல்படுத்தப்படும். அரசு மானியமாக தலா ₹1 லட்சம் வீதம் வழங்கி பிங்க் ஆட்டோ திட்டம் செயல்படுத்தப்படும். கைம்பெண்கள், கைவிடப்பட்ட பெண்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று கடந்த ஜூன் மாதம் நடந்த சட்டப்பேரவை கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

வாழ்வில் நம்பிக்கை விதைத்து புதிய பயணத்தை தொடங்கி வைத்துள்ளார் தமிழக முதல்வர்.

"ஆட்டோ முழுவதும் பிங்க் நிறத்தில் இருக்க வேண்டும். பெண்கள் மட் டும் தான் ஓட்டுநராக இருக் கவேண்டும்.

பிங்க் நிறத்தில் சீருடை அணிந்திருக்க வேண்டும். ஆட்டோவில் ஜிபிஎஸ் மற் றும் வாகனம் இருக்கும் இடத்தை கண்காணிக்கும் சாதனம் பொருத்தப்பட்டி ருக்க வேண்டும்," என்ப தெல்லாம் இந்த ஆட் டோவை ஓட்டிச்செல்லும் மகளிருக்கான விதிமுறைகள். இந்த ஆட்டோவில் பய ணிக்கும் மகளிர் மட்டு மன்றி, ஓட்டிச்செல்லும் மகளிருக்கும் நல்லதொரு பாதுகாப்பு உணர்வை தரும் என்றால் அது மிகையல்ல.

இதன் தொடர்ச்சியாக நடந்த மகளிர் தினவிழாவில் மகளிர் மேம்பாட்டுக்காக மேற்கொண்ட அரியதிட்ட ங்களை பட்டியலிட்டு அசர வைத்தார் முதல்வர்.

'நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் புதுமைப் பெண், விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மக்களை தேடி மருத்துவம், காலை உணவு திட்டங்களில் மகளிர் சுயஉ தவிக்குழுக்களின் பங்க ளிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்து நிறுத்தி பாதுகாக்கும் வகையில் பாலின வளமையங்கள்" என்று முத்தான திட்டங் களை பட்டியலிட்ட போது, வளைகரங்கள் எழுப்பிய உற் சாக கரவொலியே இதற் கொரு அத்தாட்சியாக அமைந்து நின்றது.

மொத்தத்தில் திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமே ரத்தபேதம் இல்லை. பால்பேதம் இல்லை என்பது தான். அதுவே முழுமையான சமூ கநீதி. இதை உணர்த்தவே சொத்தில் பெண்களுக்கு சம உரிமை என்ற பெரியாரின் தீர்மானத்தை சட்டமாக்கி னார் கலைஞர். இது மட்டு மன்றி பல்வேறு துறைகளில் பெண்களுக்கான இடஒதுக் கீட்டையும் உயர்த்தினார். தாயில்லாமல் நானில்லை என்று சொல்வார்கள். இந்த வகையில் ஆண்கள் இல்லா மல் பெண்கள் இல்லை. இதை உணர்ந்த ஆண்கள் நாங்கள் என்பதால் மகளிர்தி னவிழாவில் பங்கேற்கிறோம் என்பது உண்மையின் பெரு மிதம்.

அடுப்பூதும் பெண்க ளுக்கு படிப்பு எதற்கு என்று மடமைகள் சூழ்ந்திருந்த காலம் ஒன்று இருந்தது. திரா விடத்தலைவர்களின் சமூக நீதி சார்ந்த சமத்துவ திட்டங் கள்தான் இதற்கு சம்மட்டி அடி கொடுத்தது. பட்டங் கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் நிகழ வேண்டும் என்ற பாரதியின் கனவுக்கு உயிர் கொடுத்தது. இன்று இந்தியதேசத்தில் அரும்பெரும் சாதனைகள் படைக்கும் மகளிருக்கு எல் லாம் வழிகாட்டியாகவும் தமிழ்நிலம் மாறிவருகிறது. இதில் முதல்வர் தொடங்கி வைத்துள்ள 'பிங்க் ஆட்டோ' பயணமும் உழைக்கும் மகளிரின் நம் பிக்கை பயணத்திற்கான புதிய பாதைகளை திறந்து வைத்துள்ளது என்பதே நிதர் சனம்.

இவ்வாறு 'தினகரன்'தலை யங்கத்தில் கூறியுள்ளது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அணி சார்பில் இந்தி திணிப்பு,நிதி பகிர்வில் பாரபட்சம்,தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து நெல்லை டவுண் வாகையடி முனையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணிதுறை தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லி.முகம்மது மீரான் மைதீன்,மாயா செந்தில் குமார், முகமது சபி,மிக்கேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் மேயர் பி.எம்.சரவணன் வரவேற்றார்.மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் அப்துல்வஹாப் எம். எல்.ஏ.மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் மைதீன் கான் தலைமை கழக பேச்சாளர்கள் ராஜா கம்பீரன் அப்பாஸ்,சே.ரகுமாள், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் லெட்சுமணன்,மாநகரக் கழக செயலாளர் சு. சுப்பிரமணியன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் எஸ். வி. சுரேஷ்,கிரிஜா குமார் மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், மாரியப்பன், வட்ட கழக செயலாளர்கள் கேபிள் குமரேசன், மன்சூர்,லெனின் வேல்முருகன் மாரிமுத்து, ஆவின் கல்யாணி , ஆனந்த் பெருமாள் ,செந்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர் நவநீதன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா பா.செல்வம், அலீப் மீரான் உள்பட பலர் உள்ளனர்.